தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 7, திருவள்ளுவர் ஆண்டு–2046

2015 ஆகஸ்ட் 24, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை.”

இயற்கையான அறிவுக் கூர்மையும், உயர்வான நூலறிவும், கூர்மையும் ஒருசேரப் பெற்றவர்களுக்கு தீர்த்து வைக்க முடியாத மிக நுட்பமான செயல்கள் என்று எதுவும் இல்லை, இருக்கவே இருக்காது.

1. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் வெற்றி பெற்று அவைக்கு வருகை புரிந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *“தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தருமமே வெல்லும்” என பகவத் கீதை உரைக்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வினாலும், சதி சூழ்ந்த சக்கர வியூகத்தில் வீழ்ந்திட மாண்புமிகு அம்மா ஒன்றும் அபிமன்யு அல்லவே! சக்கரத்தையே கையில் சுழலவிட்டு, சதிகளை சம்ஹாரம் செய்கிற மகாவிஷ்ணுவின் மனித வடிவமன்றோ (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

அச்சமின்றித் தடைகளை அகற்றி, துணிவோடு நீதியை நிலைநாட்டும் தைரிய லட்சுமி அன்றோ மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

காலம் தரும் சோதனை, கடவுளையும் விடுவதில்லை. ஆனால் தருமம், சத்தியமாய் வெல்லாமல் விட்டதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தருமத்திற்கு வருகின்ற சோதனை, அச்சமற்ற போர்க் குணத்தை அள்ளிக் கொடுக்கும். விவேகத்தைக் கூட்டி, வீரத்தைப் பெருக்கி, விபரீதத்தைக் கழித்து, வியூகத்தை வகுக்கும்; வாய்ப்புகளை அள்ளிக் கொடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

நதி, இனம், மொழி என அனைத்திலும் தமிழகத்தின் உரிமையை, தமிழ் இனத்தின் உடைமையை, விழிப்பால், விவேகத்தால் வென்றெடுத்து, வெற்றிகளைக் குவித்துவரும் கடமை குன்றாத் தாயின் கம்பீரப் போராட்டங்கள் சரித்திரமாகி வருகையில் (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரமாகி வருகையில், சத்தியமே வெல்லும், தருமமே வெல்லும். ஆம்! தருமம் வென்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆர்.கே. நகர் தொகுதியில் ஒன்றரை இலட்சம் வாக்குகள் அதிகம் பெற்று, மகத்தான வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேரவைக்கு வருகை புரிந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த வெற்றி, அன்னைத் தமிழ் பூமி அறிந்திராத வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) அளப்பரிய வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) மகத்தான வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) விண் தொட்ட வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) தாயுருவப் போராளிக்கு தலைநகர் தந்த வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) நற்றமிழ்த் தாயின் நான்காண்டு சாதனைக்கு நற்சான்று அளிக்கும் வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழ் இனமே கொண்டாடும் உன்னத வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுக்கு நிகர் எவரும் இல்லையென பதிய வைத்த வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) காரிருளைக் கிழித்து, வெற்றிதனைக் குவித்து, வந்துள்ள தாயே வருக! (மேசையைத் தட்டும் ஒலி) புடம் போட்ட தங்கமென, புறப்பட்டு வந்துள்ள புறநானூறே வருக! (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றப் பேரவைக்குப் புகழ் சேர்க்க முடிசூடி வந்துள்ள முழுமதியே! வருக, வருகவென வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2015 ஆகஸ்ட் 24] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 10–05

சிம்மம் சிம்மாசனத்தில், வரவேற்கிறோம் சிவப்புக் கம்பளத்தில். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவையிலே குலசாமி, பேருவகையில் இப்பூமி. (மேசையைத் தட்டும் ஒலி) மகராசி வந்துள்ளார், மாதரசி வந்துள்ளார், (மேசையைத் தட்டும் ஒலி) மனித சக்தி கடந்த, மகா சக்தியாக வந்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) புகழரசி வருகையால், பேரவையும் வெற்றி நடையில். (மேசையைத் தட்டும் ஒலி) உலகமெங்கும் உலவுகிற தமிழ் இனத்தை தம் உயிராய் காக்கிற, தாய்க்கே இனி எப்பொழுதும், எக்காலமும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிலும் வெற்றி, வெற்றியென தரணி முழுவதும் ஒலிக்கட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பத்து கோடி தமிழ் இனமும் பயன் பல பெற்று, பரணி பாடட்டும். பல்லாண்டு, பல்லாண்டு நலமோடு, புகழோடு, உயர்வோடு, வளமோடு, (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்போடு வாழ்வாங்கு வாழ, எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களை வருக, வருக என பணிந்து வணங்கி வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. தி.ப. ஆறுமுகம் அவர்கள் 18–8–2014 அன்றும், திரு. பி. முருகையன் அவர்கள் 27–3–2015 அன்றும், திரு. செ. கிருஷ்ணன் அவர்கள் 3–4–2015 அன்றும், திரு. ஆர். கிருஷ்ணசாமி கோபாலர் அவர்கள் 9–4–2015 அன்றும், திரு. கே. மருதாசலம் அவர்கள் 15–4–2015 அன்றும், திரு. இரா. மகேந்திரன் அவர்கள் 18–4–2015 அன்றும், திரு. சோ. பால்ராஜ் அவர்கள் 4–5–2015 அன்றும், திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் 13–5–2015 அன்றும், திரு. ச. சங்கமுத்து தேவர் அவர்கள் 2–6–2015 அன்றும் மற்றும் திரு. கு. தங்கமுத்து அவர்கள் 20–7–2015 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. தி.ப. ஆறுமுகம் அவர்கள் 1996 முதல் 2001 வரை திருச்செங்கோடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப்